## *அத்தியாயம் 2*


# தேசிய வருமானமும் செலவும்

## 2.1 பொதுவான போக்குகள்

2001ஆம் ஆண்டில் உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. இது 1948ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்ற பின்னரான முதலாவது எதிர்க்கணிய வளர்ச்சியாகும். இதற்கு முன்னர் 1971ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மிகத்தாழ்ந்த வளர்ச்சியான 0.2 சதவீதமானது இளைஞர்களின் கிளர்ச்சியின் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டதாகும். அதன் நீண்டகால வளர்ச்சிப்போக்கான ஆண்டொன்றுக்கு 5 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் தற்காலிக பின்னடைவானது பொருளாதாரத்தின் கூட்டுவழங்கல் மற்றும் கூட்டுக்கேள்வி ஆகிய இரு பக்கங்களையும் பாதித்த பல காரணிகளின் எதிர்க்கணிய விளைவில் பிரதிபலித்தது. வழங்கல் பக்கத்தில் பொருட்களினதும் பணிகளினதும் உற்பத்தி இவ்வாண்டில் சுருக்கமடைந்தது, அல்லது மெதுவடைந்தது. இதன் விளைவாக பொருளாதார நடவடிக்கைகளின் இலாபத்தன்மை கணிசமான அளவில் பாதிக்கப்பட்டது. கேள்விப் பக்கத்தில் மொத்தக்கேள்வியின் முக்கிய மூலமொன்றான தனியார் நுகர்வுச் செலவின் உண்மை வளர்ச்சியானது மந்தமான பொருளாதார நிலைமைகளின் கீழ் வரலாற்று ரீதியில் அதிகரித்துச்செல்லும் போக்கிலிருந்து நகர்ந்து பெரும்பாலும் அதே மட்டத்தில் நிலையாக இருந்தது. 2000ஆம் ஆண்டில் தனியார் நுகர்வுச் செலவின் உண்மை வளர்ச்சி 5 சதவீதமாகக் காணப்பட்டது. 2001ஆம் ஆண்டில் உண்மை நியதிகளில் முதலீட்டுச்செலவு 17.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வளர்ந்து செல்லும் இறைக்கட்டுப்பாடுகளின் கீழ் தனியார் துறையினர் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டமையும் அதிகரித்துச் செல்லும் அரசிறைக் கட்டுப்பாடுகளின் காரணமாக அரசாங்கம் தனது மூலதனச் செலவைக் குறைத்துக் கொண்டமையுமே இதற்கான காரணமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 17.4 சதவீதத்திலிருந்து 15.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த உள்நாட்டுச் சேமிப்புக்களின் இயலளவை குறைவடையச் செய்த பொருளாதார வளர்ச்சியின் சுருக்கத்தின் காரணமாக முதலீட்டுக்காக கிடைக்கத்தக்கதாக இருந்த மூலவளங்களை கணிசமான அளவில் வீழ்ச்சியடையச் செய்தது. இதற்கு மேலதிகமான பொருளாதாரத்தில் தொழில் வாய்ப்புக்களின் இழப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் தொழில் வாய்ப்பின்மை வீதம் சிறிதளவான அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

2000ஆம் ஆண்டில் பொருளாதாரம் சிறந்த செயலாற்றத்தைக் காட்டி 6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த போதிலும் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து மெதுவடைவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. 2000ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் பொருளாதாரம் 6.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் இரண்டாம் அரைப்பகுதியில் 5.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2001ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் தயாரித்த ஏற்றுமதிகளுக்கான கேள்வியினைக் குறைவடையச் செய்த கைத்தொழில் நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகள் மெதுவடைந்தமையினதும் பாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக வேளாண்மையின் மோசமான செயலாற்றத்தினதும் பெருமளவு காரணமாக வளர்ச்சி 0.9 சதவீதத்துக்கு

வரைபடம் 2.1
மொ.உ.உ.வளர்ச்சி வீதங்களும் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியும்
1992 – 2001




மேலும் வீழ்ச்சியடைந்தது. பெருமளவு கடினமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சூழலின் கீழ் சுருக்கமானது இரண்டாவது அரைப்பகுதியிலேயே நிகழ்ந்தது. நீண்டநேர மின்வெட்டினையும் விளைவித்த நீண்ட வரட்சியும் யூலை மாதத்தில் விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலும் அதனைத் தொடர்ந்து கப்பல் மற்றும் விமானப் பயணங்களுக்கு விதிக்கப்பட்ட காப்புறுதி மிகைக்கட்டணமும் குறிப்பாக ஓகத்தில் பாராளுமன்றம் பிற்போடப்பட்டதைத் தொடர்ந்து காணப்பட்ட பொதுவான அரசியல் நிச்சயமற்ற தன்மையும் முதலீட்டாளர்களையும் மற்றும் வாணிப நம்பிக்கையையும் மோசமாகப் பாதித்தன. இன்னுமொரு மோசமான பாதிப்பு என்னவெனில் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான பாரிய சந்தையான ஐக்கிய அமெரிக்காவில் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியானது முக்கிய பொருளாதார மற்றும் இராணுவ இலக்குகளின் மீது

## அட்டவணை 2.1
### நிலையான (1996) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்

| துறை | அதிகரிப்பு வீதம் (%) | | மொத்த தேசிய உற்பத்தி மாற்றங்களுக்கான பங்களிப்பு | | மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|
| | 2000(அ) | 2001(அ) | 2000(அ) | 2001(அ) | 2000(அ) | 2001(அ) |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில் கடற்றொழில் | 1.8 | -3.0 | 6.3 | -42.2 | 20.5 | 20.1 |
| வேளாண்மை | 1.7 | -3.7 | 4.6 | -41.0 | 15.9 | 15.5 |
| தேயிலை | 7.8 | -3.4 | 1.8 | -3.4 | 1.4 | 1.4 |
| இறப்பர் | -9.7 | -1.8 | -0.7 | -0.5 | 0.4 | 0.4 |
| தெங்கு | 8.0 | -9.7 | 2.3 | -11.8 | 1.8 | 1.6 |
| நெல் | -0.3 | -5.7 | -0.2 | -12.8 | 3.2 | 3.1 |
| ஏனையவை | 0.9 | -2.0 | 1.4 | -12.5 | 9.1 | 9.0 |
| காட்டுத்தொழில் | 1.6 | 5.0 | 0.5 | 6.3 | 1.8 | 1.9 |
| கடற்றொழில் | 2.5 | -4.0 | 1.2 | -7.5 | 2.7 | 2.7 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல்லுடைத்தலும் | 4.8 | 0.7 | 1.4 | 0.8 | 1.7 | 1.8 |
| 3. தயாரிப்புத் தொழில் | 9.2 | -4.0 | 25.9 | -48.0 | 17.4 | 16.9 |
| தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டுப் பதனிடல் | 4.2 | -5.3 | 1.5 | -7.6 | 2.1 | 2.0 |
| தொழிற்சாலைக் கைத்தொழில் | 10.4 | -3.9 | 23.2 | -37.3 | 14.0 | 13.7 |
| சிறு கைத்தொழில் | 5.5 | -3.5 | 1.2 | -3.1 | 1.3 | 1.3 |
| 4. கட்டடவாக்கம் | 4.8 | 2.5 | 5.6 | 11.9 | 7.0 | 7.3 |
| 5. மின்வலு, வாயு, நீர் | 4.5 | -2.9 | 1.1 | -2.9 | 1.5 | 1.4 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பு | 7.8 | 5.2 | 14.9 | 42.1 | 11.8 | 12.5 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் | 8.7 | -6.5 | 31.2 | -99.0 | 22.1 | 21.0 |
| இறக்குமதி | 12.9 | -10.7 | 20.0 | -73.5 | 10.0 | 9.0 |
| ஏற்றுமதி | 18.3 | -8.0 | 7.3 | -14.9 | 2.7 | 2.5 |
| உள்நாடு | 2.4 | -1.6 | 3.9 | -10.6 | 9.5 | 9.4 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 6.4 | 5.0 | 8.0 | 26.0 | 7.6 | 8.1 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை | 1.7 | 1.4 | 0.5 | 1.7 | 1.8 | 1.8 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 4.2 | 1.1 | 3.4 | 3.8 | 4.8 | 5.0 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 2.3 | 2.2 | 1.6 | 6.0 | 4.0 | 4.1 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 6.0 | -1.4 | 100.0 | -100.0 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

செத்தெம்பர் 11ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலினாலும் அதன் பின்னரும் தாமதப்பட்டமையாகும். இத்தகைய மோதல் நிலைமைகளின் கீழ் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பொருளாதாரத்தில் சுருக்கமொன்று தவிர்க்க முடியாததொன்றாக இருந்தது. சுருக்கமானது 3.5 சதவீதமகக் காணப்பட்டது. இதன் விளைவாக ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.4 சதவீதத்திற்கு சுருக்கமடைந்தது.

இதேவேளையில் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணிச் செலவுக்குச் சீராக்கம் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி 2001ஆம் ஆண்டில் உண்மை நியதிகளில் 1.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் இது 5.8 சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்டது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாயின் சிறப்பான செயலாற்றத்தின் காரணமாக மொத்த தேசிய உற்பத்தியின் சுருக்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுருக்கத்தை விட தாழ்வாகக் காணப்பட்டது வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் தொடர்ந்தும் எதிர்க்கணியமாகவே காணப்பட்டபோதிலும் காரணிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக 2001ஆம் ஆண்டில் மேம்பாடடைந்தது. வெளிநாட்டுக் கடன்பாடுகளின் மீது குறைந்த வட்டிக்கொடுப்பனவை விளைவித்த சருவதேச வட்டி வீதங்களின் கணிசமான வீழ்ச்சியே இதற்கான முதன்மைக் காரணமாகும்.

2001ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பக்கத்தில் உலக பொருளாதாரம் தானாகவே இடர்களை எதிர்கொண்டது. பெரும்பாலான நாடுகள் பொருளாதார நடவடிக்கைகளின் மெதுவடைவினை அனுபவித்த வேளையில் வேறு சில நாடுகள் பொருளாதார வளர்ச்சியின் சுருக்கத்தினை எதிர்கொண்டன. 2000ஆம் ஆண்டில் உலக எண்ணெய் விலைகளின் அதிகரிப்பு, நலிவடைந்த பங்குச் சந்தைகள், குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவில் கம்பனித்துறையில் தொடர்ச்சியான இடர்கள் யப்பானில் நிதி மற்றும் கம்பனித்துறைகளில் காணப்பட்ட தொடர்ச்சியான இடர்பாடுகள் அதன்விளைவாக இதன் விளைவாக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு நாடுகளின் உள்நாட்டுக் கேள்வி நலிவடைந்தமை என்பன 2001ஆம் ஆண்டில் உலக பொருளாதார வளர்ச்சியை மந்தமடையச் செய்த காரணிகளுள் சிலவாகும்.

ஐக்கிய அமெரிக்க பொருளாதாரத்தின் தாமதமான மீட்சி, ஐரோப்பாவில் கீழ்நோக்கிய மாற்றம், யப்பானின் தொடர்ச்சியான மந்தநிலை என்பன ஆண்டின் முதலரைப்பகுதியில் உலகளாவிய ரீதியில் பொருளாதாரத்தை மெதுவடையச் செய்தன. 2001ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் நேர்மாற்றமடையும் என எதிர்பார்க்கப்பட்ட இந்தப்போக்கு ஆண்டின் பிற்பகுதியில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின்மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலினால் மிக மோசமான நிலைக்கு உள்ளானது. கிழக்காசிய நாடுகளைப் பாதித்த தகவல் தொழில்நுட்ப செலவில் ஏற்பட்ட வீழ்ச்சி, குறிப்பாக இலத்தீன் அமெரிக்காவில் தோற்றம் பெறும் சந்தைகள் பலவற்றில் பாதிப்பை ஏற்படுத்திய மோசமடையும் நிதியியல் நிலைமைகள் என்பவற்றுடன் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு நாடுகளின் பொருளாதாரத்தின் மெதுவடையும் தன்மை உலகின் ஏனைய நாடுகளுக்கும் விரிவடைந்தது. செயல்துறையில் அனைத்து முக்கிய பொருளாதாரங்களுக்குமான குறுகிய கால பொருளாதார எதிர்வுகூறல்கள் பல தடவைகள் பெரும்பாலும் முக்கிய பொருளாதாரங்கள் யாவற்றிலும் கீழ்நோக்கித் திருத்தப்பட்டன. மெதுவான வளர்ச்சி வாய்ப்புக்கள் வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளுக்கான தாழ்ந்த கேள்வியாகவும் பலதரப்பட்ட முதன்மைப் பண்டங்களுக்கான தாழ்ந்த விலையாகவும் மாற்றல் செய்யப்பட்டது. சீனா, இந்தியா, ரஷ்யா, வியட்நாம் போன்ற ஒருசில நாடுகளைத் தவிர ஏனைய பல நாடுகள் உலக பொருளாதாரம் மெதுவடைந்தமையின் காரணமாக பாதிக்கப்பட்டன. 2001ஆம் ஆண்டுக்கான உலக வெளியீட்டு வளர்ச்சி 2.4 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு முன்னைய எதிர்வுகூறலான 4.2 சதவீதம் அதேபோன்று முன்னைய ஆண்டின் வளர்ச்சி வீதமான 4.8 சதவீதம் மற்றும் கடந்த பத்தாண்டுகளின் சராசரி வளர்ச்சியான 3 சதவீதம் என்பனவற்றை விட மிகவும் தாழ்வாகக் காணப்பட்டது. இது உலக வர்த்தகத்திலும் வளர்ச்சியிலும் பிரதிபலிக்கப்பட்டது. 10 சதவீதத்திற்கும் கூடுதலாக வளர்ச்சியடைந்த உலக வர்த்தகத்தின் அளவு 2001ஆம் ஆண்டில் 1 சதவீதத்திற்கும் கீழாக வீழ்ச்சியடைந்தது. உலக சழிப்புடன் 2000ஆம் ஆண்டில் செழிப்படைந்த இலங்கையின் பொருளாதாரம் 2001ஆம் ஆண்டில் உலக மந்த நிலையுடன் சுருக்கமடைந்தது. எனினும் உள்நாட்டில் காணப்பட்ட கடினமான நிலைமைகளின் காரணமாக இலங்கைப் பொருளாதரத்தின் சுருக்கமானது சார்புரீதியில் கடுமையானதாக இருந்தது.

கைத்தொழில் துறை[1] 2001ஆம் ஆண்டில் 2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. தயாரிப்புத்துறை இத்துறையின் கூட்டிய பெறுமதியில் அறுபது சதவீதத்திற்கும் மேலான பங்களிப்பை வழங்கும். தயாரிப்புத்துறை 2001ஆம் ஆண்டில் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இத்துறை 1977ஆம் ஆண்டில் 0.6 சதவீத எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் அதனைத் தொடர்ந்து ஆண்டொன்றுக்கு சராசரியாக 7 சதவீதத்திற்கும் மேலாக உறுதியாக வளர்ச்சியடைந்து தாராளமாக்கலின் பின் பொருளாதாரத வளர்ச்சிக்கான உந்து சக்தியாக விளங்கியது. இந்த வளர்ச்சிப் பெறுபேறானது ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் துறையின் செயலாற்றமே பெருமளவு காரணமாக அமைந்தது. இத்துறையானது இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் அதிஉயர் மூலகமொன்றினைக் கொண்டதும் அதிகூடிய போட்டியுடைய சந்தையினை எதிர்நோக்குவதுமான அணியும் மற்றும் ஆடைகள் வகையிலேயே பெருமளவு கவனம் செலுத்தியது. 2001ஆம் ஆண்டில் பலதரப்பட்ட காரணங்களினால் அணியும் ஆடைகள் கைத்தொழில் நெருக்கடி நிலைமையொன்றினை எதிர்கொண்டது. உலக சந்தையின் மிகை நிரம்பலினால் ஏற்பட்ட விலைவீழ்ச்சி சீனா, கம்போடியா, வியட்நாம் போன்ற தாழ்ந்த உற்பத்திச் செலவுகளைக் கொண்ட நாடுகளிலிருந்தான கடுமையான போட்டி, ஐரோப்பிய சந்தைகளுக்கு புவியியல் ரீதியில் அருகாமையில் உள்ள தோற்றம் பெறும் பொருளாதாரங்களின் உட்புகுதல், ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றின் பொருளாதாரங்கள் மெதுவடைந்தமை ஆகியன இணைந்து அணியும் ஆடைகள் கைத்தொழிலில் நெருக்கடியை உருவாக்கின. இதற்கு மேலதிகமாக கரிபியன் மற்றும் துணை சகாரா நாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்க நாடுகளினால் வழங்கப்பட்ட அனுமதிப்பங்கு அற்ற சலுகைகளும் இலங்கையின் புடவைகள் ஆடைகளுக்கான போட்டித்தன்மையினை கடுமையாகப் பாதித்தன. சந்தையில் தங்கியிருக்க வேண்டுமேயானால் இலங்கையானது பெருமளவு போட்டித்தன்மை கொண்டதாக இருக்க வேண்டுமெனவும் முதன்மைக் கொள்வனவாளரான ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு வெளியேயான மரபு வழியற்ற சந்தைகளை இனங்காண வேண்டும் எனவும் 2001ஆம் ஆண்டின் அனுபவங்கள் குறித்துக்காட்டுகின்றன. இதன் மூலம் கற்றுக்கொண்ட இன்னுமொரு முக்கிய பாடம் என்னவெனில் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் உடனடியாக அமைப்புச்

(அ) இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்டுள்ள துறைவாரியான பகுப்பாய்வுகள் உலகவங்கி வெளியீடுகள், உலக அபிவிருத்திக் குறிகாட்டிகள் என்பனவற்றில் பயன்படுத்தப்படும் பகுப்பாய்வுகளுக்கு இணங்க மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இவை பன்னாட்டு நியம கைத்தொழில் பகுப்பாய்வு (ப.நி.கை.ப) - திருத்தம் 3 பின்வருமாறு பகுப்பாய்வு செய்கிறது. புதிய துறைவாரியான பகுப்பாய்வுகளாக வேளாண்மை (ப.நி.கை.ப.பிரிவு 1- 5) கைத்தொழில் (ப.நி.கை.ப) (10 - 45) மற்றும் பணிகள் (ப.நி.கை.ப) (50 -59) என்பன விளங்கின. இதன்படி வேளாண்மை காடாக்கம் மற்றும் மீன்பிடித் துணைத்துறைகளையும் கைத்தொழில் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் தயாரிப்பு, மின்வலு, வாயு, நீர்வழங்கல் மற்றும் கட்டுமானம் ஆகிய துணைத்துறைகளையும் உள்ளடக்கியிருந்தது. மற்றைய அனைத்துத் துணைத்துறைகளும் பணிகள் துறையின் கீழ் வகைப்படுத்தப்பட்டன.

சீராக்கம் ஒன்றினையும் அணியும், ஆடைகள் கைத்தொழிலில் இருந்து விரிவான பன்முகப் படுத்தலையும் வேண்டி நிற்கின்றது என்பதாகும். உற்பத்திச் செலவின் அதிகரிப்பும் பொதுவான தயாரிப்புத்துறையின் பெறுமதி கூட்டலில் வீழ்ச்சியினை ஏற்படுத்தியது. மின்சாரம், நீர் மற்றும் தொலைத்தொடர்பூட்டல்கள் மற்றும் எரிபொருள் போன்ற பயன்பாட்டுப் பொருட்களினது விலைகளும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமாக அதிகரித்தன. இதற்கு மேலதிகமாக, ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தொடர்ச்சியான மின்வெட்டானது தயாரிப்புத்துறையின் செயலாற்றம் மற்றும் இலாபத்தன்மையில் எதிர்க்கணிய பாதிப்பை ஏற்படுத்தியது.

2001ஆம் ஆண்டில் விவசாயத்துறையின் கூட்டிய பெறுமதி 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இச்சுருக்கத்துக்கு ஆண்டு முழுவதும் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளே பெருளமளவு காரணமாயின. கைத்தொழில் மற்றும் பணிகள் போன்ற ஏனைய இரு துறைகளைப் போலன்றி விவசாயத்துறையானது பல ஆண்டுகளாக தளம்பல்களைக் கொண்டிருந்தது. இதன் செயலாற்றம் பெருமளவில் வானிலை நிலைமைகளில் தங்கியிருப்பதே இதற்கான காரணமாகும். அண்மைக் காலங்களில் 1992ஆம் ஆண்டிலும் 1996ஆம் ஆண்டிலும் கூட பாதகமான வானிலை நிலைமைகளின் கீழ் விவசாயத்துறை சுருக்கங்களை அனுபவித்தது. எனினும் விவசாயத்துறையின் வளர்ச்சியைத் தடைசெய்த நீண்டகால பிரச்சனை என்னவெனில் தாழ்ந்த மட்டங்களிலான உற்பத்தித்திறன் ஆகும். அண்மைய ஆண்டுகளில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையினதும் உள்நாட்டு விவசாயத்தினதும் சில வகைகளில் உற்பத்தித்திறனில் மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டன. தனியார் முகாமைத்துவக் கம்பனிகளால் பின்பற்றப்பட்ட சிறந்த முகாமைத்துவ மற்றும் பயிர்ச்செய்கைப் பிரயோகங்களின் காரணமாக பெருந்தோட்ட விவசாயத்தில் தேயிலைச் பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறன் மேம்பட்டது. உள்நாட்டு விவசாயத்தில் பல காரணங்களினால் கடந்த பத்து ஆண்டுகளாக நெற்பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறன் மேம்பட்டது. அரசாங்கத்தின் தனியுரிமை நீக்கப்பட்டதன் காரணமாக தனியார்துறையினரின் ஊடாக விவசாயிகளுக்கு மேம்பட்ட விதைநெல் கிடைக்கக்கூடியதாக இருந்தமையும் விவசாயத் திணைக்கத்தினால் யாயா செயல்முறை விளக்க நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப ஆதரவை ஏற்றுக்கொண்டமையும் குறிப்பாக நீர்ப்பாசனப் பிரதேசங்களின் விவசாய நிலங்களில் விளைச்சலை மேம்படுத்தின. உற்பத்தித்திறன் தாழ்வாகக் காணப்பட்ட மழை நீரினால் பயிர்ச்செய்கை பண்ணப்படும் இலாபம் குறைந்த நிலங்களில் பயிர்ச்செய்கை கைவிடப்பட்டமையும் நெற்பயிர்ச் செய்கையின் பொதுவான செயல்திறனை அதிகரிக்கச் செய்தது. இந்தப் பின்னணிக்கு எதிராக 2001ஆம் ஆண்டில் விவசாயத்தில் கூட்டிய பெறுமதி வீழ்ச்சியடைந்தமையானது சுழற்சி முறையானது எனக் கருதப்படுவதுடன் இது பொதுவான வானிலை நிலைகளுடன் மீட்சியடையக்கூடியதொன்றாகும்.

போக்குவரத்து, தொடர்பூட்டல், மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிதியியல் பணிகள், பொது நிருவாகம் மற்றும் வேறு எங்கும் குறிப்பிடப்படாத ஏனைய அனைத்துப் பணிகளையும் பணிகள் துறை உள்ளடக்குகின்றதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 52.5 சதவீதத்தினையும் கொண்டுள்ளது. 2001ஆம் ஆண்டில் பணிகள் துறையின் கூட்டிய பெறுமதி 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சியானது சருவதேச வர்த்தகம் சுருக்கமடைந்தமை மற்றும் விவசாய, கைத்தொழில் ஆகிய முக்கிய உற்பத்தித்துறைகள் பொதுவாக மெதுவடைந்தமை என்பனவற்றின் விளைவாகும்.

செலவுப் பக்கத்தில் நடைமுறைச்சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2000ஆம் ஆண்டின் ரூபா 1258 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 1400 பில்லியனாக விளங்கியது. உண்மைப் பொருளாதார வளர்ச்சியின் சுருக்கத்தினைத் தொடர்ந்து இந்த அதிகரிப்பு ஏற்பட்டதுடன் பொதுவான விலை அதிகரிப்பே இதற்கு ஒரே காரணமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியினால் அளவிடப்பட்டவாறு பொதுவான விலைப் பணவீக்கம் 2000ஆம் ஆண்டின் 6.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 13 சதவீதமாக இருந்தது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் பொருட்களினதும் பணிகளினதும் தாழ்ந்த வழங்கல்களின் மூலமாக உயர்ந்த வீக்கம் தூண்டப்பட்டது. உள்நாட்டு உற்பத்தியின் தலைக்குரிய வருமானம் ரூபா.74,760 என மதிப்பிடப்பட்டுள்ளதோடு முன்னைய ஆண்டின் ரூபா.68,102 [2] இனை விட 9.8 சதவீத அதிகரிப்பை கொண்டிருந்தது. தலைக்குரிய வருமானத்தின் அதிகரிப்பானது பொதுவான விலைப் பணவீக்கத்தின் தாக்கத்தினை எதிரீடு செய்வதற்குப் போதுமானதாகக் காணப்படாததோடு இவ்வாண்டில் உண்மை நியதிகளில் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மோசமடைந்தது. முன்னைய ஆண்டைவிட 2001ஆம் ஆண்டில் இலங்கை ரூபா சராசரி 15.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொத்த

2. 2001ஆம் ஆண்டின் குடித்தொகை மற்றும் வீடமைப்பு மதிப்பீட்டைத் தொடர்ந்து குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தற்காலிக குடித்தொகை மதிப்பீடுகளின் அடிப்படையில் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்கள் திருத்தப்பட்டன.

உள்நாட்டு உற்பத்தி 6.9 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 899 இலிருந்து ஐ.அ.டொலர் 837 இற்கு வீழ்ச்சியடைந்தது. பொருளாதார நடவடிக்கைகள் சுருக்கமடைந்தமையானது தொழில் வாய்ப்புக்களின் மட்டத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. 1993ஆம் ஆண்டில் 13.8 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 7.6 சதவீதத்திற்கு தொடர்ந்து வீழ்ச்சியடைந்த தொழில்வாய்ப்பின்மை வீதம் 2001ஆம் ஆண்டில் சிறிதளவால் 7.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. தொழிற்படை பங்கேற்பு வீதமும் 2000ஆம் ஆண்டின் 49.2 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் 48.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆட்குறைப்பினைத் தடைசெய்யும் தொழிற்சந்தையின் இறுக்கமான தன்மையின் காரணமாக சுருக்கத்தின் முழுமையான தாக்கமும் தொழில்வாய்ப்பு புள்ளிவிபரங்களில் பிரதிபலிக்கப்படவில்லை என நம்பப்படுகின்றது.

கடந்த அண்மைக் காலங்களில் ஆண்டொன்றுக்கு 15 சதவீதத்திற்கும் மேலாக தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்த நடைமுறைச் சந்தை விலைகளில் முதலீட்டுச்செலவு (மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்) ரூபா.308 பில்லியன் என மதிப்பிடப்பட்டது.இது 2000ஆம் ஆண்டிலேற்பட்ட 12.5 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். இதன்படி, 2000ஆம் ஆண்டில் 28 சதவீத உச்சத்தை எய்திய முதலீடு/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2001ஆம் ஆண்டில் 22.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முதலீட்டின் இந்த வீழ்ச்சியினால் ஏற்பட்ட முழுமையாகவே தனியார்துறை முதலீடுகள் 14.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையின் விளைவாகும். தனியார்துறையின் வீழ்ச்சியும் முதலீடுகளின் எதிர்க்கணிய தாக்கத்தினைக் தணிக்கக்கூடிய அரசமுதலீடுகள் வரவு செலவுத் திட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக தேவையான மட்டத்தினை விடக் கீழாக இருந்தன. 2001ஆம் ஆண்டில் அரச முதலீடுகளின் வளர்ச்சி 2.1 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி சுருக்கமடைந்தமை, கூட்டுச் சேமிப்புக்களின் வீழ்ச்சி உள்நாட்டு மற்றும் உலக கேள்வியின் மந்த நிலைமையின் காரணமாக கைத்தொழில்களில் காணப்பட்ட மிகை இயலளவு போன்ற பல காரணங்களினால் தனியார்துறை வீழ்ச்சியடைந்தது. இதற்கு மேலதிகமான, அரசியல் பக்கத்தில் நிச்சயமற்ற தன்மைகளும் முரண்பாடான கொள்கைச் சமிக்ஞைகளும் வாணிப நம்பகத்தன்மையின் மீதும் அதனைத் தொடர்ந்து தனியார்துறை முதலீட்டிலும் எதிர்க்கணிய தாக்கத்தினைக் கொண்டிருந்தன. இவ்வாண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் மூலதனப் பொருட்களின் இறக்குமதி 37.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து முதலீட்டுச் செலவின் வீழ்ச்சியும் அதில் பிரதிபலிக்கப்பட்டது. எனினும் 2000ஆம் ஆண்டில் சிறீலங்கன் எயர்லைன்ஸ் மூன்று வானூர்திகளின் கொள்வனவுக்காக ஐ.அ.டொலர் 297 மில்லியனை முதலீடு செய்தது. ஒருமுறை மட்டும் நிகழ்ந்த இந்த நிகழ்வு நீக்கப்படுமிடத்து 2001ஆம் ஆண்டில் மொத்த முதலீட்டு வீழ்ச்சி 6.5 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்ததுடன் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் வீழ்ச்சி 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. நாடொன்றின் எதிர்கால வளர்ச்சி வளத்தில் முதலீடுகள் முக்கிய பங்கொன்றினை வகிக்கின்றமையால் முதலீட்டுச் செலவின் வீழ்ச்சியானது பொருளாதாரத்துக்கு உகந்த விடயமொன்றல்ல.

அரச நுகர்வுச் செலவையும் தனியார் நுகர்வுச் செலவையும் உள்ளடக்கிய மொத்த நுகர்வுச் செலவு 2001ஆம் ஆண்டில் நடைமுறை நியதிகளில் 14.2 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் உண்மை நியதிகளில் இது 0.4 சதவீத மேம்பாடொன்று மட்டுமேயாவதோடு கடந்த அண்மைக் காலத்தில் பதிவு செய்யப்பட்டவற்றுடன் ஒப்பிடுகையில் மிக தாழ்வானதாகும். குடித்தொகை வளர்ச்சிக்கு சீராக்கம் செய்யும்போது 2001ஆம் ஆண்டில் தலைக்குரிய நுகர்வு மட்டம் முன்னைய ஆண்டின் அதே மட்டத்தில் மாறாது காணப்பட்டது. மூலவளங்களின் பக்கத்தில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூபா 215 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது பெயரளவு நியதிகளில் 2.1 சதவீத வீழ்ச்சியாகும். தனியார் சேமிப்புக்கள் உயர்ந்த வீதமொன்றான 8.2 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டில் பெயரளவு நியதிகளில் 60 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அரசாங்க குறைச்செலவினால் இது முழுமையாகவே எதிரீடு செய்யப்பட்டது. உள்நாட்டுச் சேமிப்பு/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2000ஆம் ஆண்டின் 17.4 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 15.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தனியார்/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதமும் 2000ஆம் ஆண்டின் 20.9 சதவீதத்திலிருந்து 20.3 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் தேசிய சேமிப்புக்கள் 21.5 சதவீதத்திலிருந்து 19.5 சதவீதத்துக்கு தாழ்ந்த விளிம்பு ஒன்றில் மோசமடைந்தது. மொத்த உள்நாட்டு விகிதமொன்றாக மூலவள இடைவெளி அதாவது தேசிய சேமிப்புக்கள் முதலீட்டு இடைவெளி 2001ஆம் ஆண்டில் 2.5 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. 2000ஆம் ஆண்டில் இந்த இடைவெளி 6.5 சதவீதமாகும். முதலீட்டுச் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியே இந்த வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

## 2.2 துறைவாரியான செயலாற்றம்

2001ஆம் ஆண்டில் விவசாயம் (3.0 சதவீதம்), கைத்தொழில் (2.0 சதவீதம்) மற்றும் பணிகள் (0.5 சதவீதம்) என்பனவற்றின் உண்மை நியதிகளிலான கூட்டிய பெறுமதி வீழ்ச்சியடைந்தது. கைத்தொழில்

துறையின் கூட்டிய பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி கைத்தொழில் துறையின் பொருளாதார வளர்ச்சியின் பொதுவான சுருக்கத்துக்கு 38.3 சதவீத பங்களிப்பை வழங்கியது. சுருக்கத்துக்கு விவசாயத்துறையினதும் பணிகள் துறையினதும் பங்களிப்பு முறையே 42.2 சதவீதமாகவும் 19.5 சதவீதமாகவும் இருந்தது. பணிகள் நடவடிக்கைகளில் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துறையின் கூட்டியபெறுமதியின் வீழ்ச்சியானது இத்துறையின் பொதுவான வட்டி பெறுமதியின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்ததோடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மொத்த சுருக்கத்தின் பெரும்பாலும் 100சதவீதத்திற்கும் மேலாக பங்களிப்புச் செய்தது.

## கைத்தொழில் துறை

திருத்தப்பட்ட வகைப்படுத்தல்களுக்கு இணங்க கைத்தொழில் துறையானது தயாரிப்பு, கட்டுமானம், சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும், மின்சாரம், வாயு நீர்வழங்கல் ஆகிய நான்கு துணைத்துறைகளை உள்ளடக்குகின்றது. கைத்தொழிலின் மொத்த கூட்டிய பெறுமதிக்கு அவை முறையே 61.8 சதவீத, 26.5 சதவீதம், 6.5 சதவீதம் மற்றும் 5.2 சதவீத பங்களிப்பை வழங்கின.

2000ஆம் ஆண்டில் 9.2 சதவீத கணிசமான வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்த தயாரிப்புத்துறை 2001ஆம் ஆண்டில் 4.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. தயாரிப்பின் அனைத்துத் துணைத்துறைகளினதும் கூட்டிய பெறுமதி வீழ்ச்சியடைந்தது. கூட்டிய பெறுமதி ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் தொழில் உருவாக்கம் ஆகிய நியதிகளில் தயாரிப்புத்துறையின் பாரிய துணைத்துறையாகிய தொழிற்சாலைக் கைத்தொழில் துறை 2001ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டைவிட 3.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கூட்டிய பெறுமதி நியதிகளில் தொழிற்சாலைக் கைத்தொழிலின் 40 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புடைவைகள், அணியும் பொருட்கள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் வகைகள் 8.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போன்ற பாரிய கொள்வனவாளர்களிட மிருந்தான மந்தமான கேள்வியே இதற்கான முதன்மைக் காரணமாகும். மேலே குறிப்பிடப்பட்ட வகைக்கு மேலதிகமாக இறப்பர் மற்றும் சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள், வைரம் பதனிடல், மட்பாண்டப் பொருட்கள் போன்ற ஏனைய ஏற்றுமதிசார்ந்த வகைகளும் தாழ்ந்த கேள்வியை எதிர்கொண்டதோடு இதன்விளைவாக 2001ஆம் ஆண்டில் எதிர்க்கணிய வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன. ஒப்பீட்டு அடிப்படையில் உள்நாட்டு சந்தை சார்ந்த உற்பத்திப் பொருட்கள் திருப்திகரமாக செயலாற்றியதோடு ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களினால் உருவாக்கப்பட்ட எதிர்க்கணிய தாக்கத்தினை எதிரீடு செய்வதற்கும் இயலுமாக இருந்தன. உணவு பதனிடல், குடிபானங்கள், கட்டடப்பொருட்கள், மருந்தாக்கல் பொருட்களும் அழுக்கி நீக்கிப்பொருட்களும், பால் உற்பத்திப் பொருட்கள், விலங்குத்தீன், பீவீசி, பிளாத்திக்குப் பொருட்களும், உலோக உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இக் கைத்தொழில்கள் இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் செழிப்படைந்தன. பலதரப்பட்ட விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம், தீவிரமான விளம்பர நிகழ்ச்சிகள், கழிவுகள், இலவச வழங்கல்கள் ஊக்குவிப்பு வெகுமதிப் பத்திரங்கள், மற்றும் விலை வேறுபாடுகள் என்பன காணப்பட்டமையே இதற்கான காரணமாகும். எனினும் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பலதுறைகளில் காணப்பட்ட எதிர்க்கணிய ஆண்டு வளர்ச்சியின் விளைவாக பொதுவான பின்னடைவின் காரணமாக இக்கைத்தொழில்களும் இடர்களை எதிர்நோக்கின.

2001ஆம் ஆண்டில் பெருந்தோட்டப் பயிர்களின் பதனிடல் மூலமான கூட்டிய பெறுமதியும் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில், மூன்று முக்கிய பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்கான காரணமாகும். இதே வேளையில் 2001ஆம் ஆண்டில் சிறு கைத்தொழில் துணைத்துறையும் 3.5 சதவீதத்தினால் சுருங்கியது. பொருளாதார நடவடிக்கைகள் சுருக்கமடைந்தமையும், சுற்றுலாக் கைத்தொழில் வீழ்ச்சியடைந்தமையும் சிறு அளவுக் கைத்தொழில் துறையினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான கேள்வியைக் குறைத்தன. சிறு கைத்தொழில்களுடன் மின் இணைப்புக்களைக் கொண்ட பாரிய கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இத்துணைத் துறையை எதிர்மறையாகப் பாதித்தது.

முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் கட்டுமானத்துறை 2.5 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவடையும் தன்மையொன்றைக் காட்டியபோதிலும் இத்துறையின் உறுதியான வளர்ச்சியானது பொதுவான எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சியினைத் தணிப்பதற்கு இத்துறை பங்களிப்புச் செய்தது. பாரிய கட்டுமான செயற்றிட்டங்களின் குறைந்த எண்ணிக்கைக்கு இட்டுச் சென்ற முதலீட்டுச் செலவின் சுருக்கமே இதற்குப் பெருமளவு காரணமாக அமைந்தது. பொதுவான பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியிலும் வீடமைப்புக்

கட்டடப் பொருட்களுக்கான விற்பனைச் சுட்டெண்களில் பிரதிபலிக்கப்பட்டவாறு வீடமைப்பு மற்றும் ஏனைய கட்டுமான வேலைகளில் காணப்பட்ட அதிகரிப்பே இந்த அதிகரிப்புக்கான காரணங்களாகும். இந்த போக்குக்குச் சான்றாக பாரிய கொழும்பு வீடமைப்பு ஒப்புதல் சுட்டெண் முன்னைய ஆண்டைவிட 2001ஆம் ஆண்டில் 4.1 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் அனைத்துக் கட்டட ஒப்புதல் சுட்டெண் 4.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

2000ஆம் ஆண்டில் 4.8 சதவீதத்தினால் வளர்சியடைந்த சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல்துறை 2001ஆம் ஆண்டில் சிறிதளவான 0.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இத்துறையின் வளர்ச்சிக்கு கல்லுடைத்தல் துணைத்துறையின் 2.5 சதவீத விரிவாக்கமே தனியான காரணமாகும். கல்லுடைத்தல் உற்பத்திப் பொருட்கள் முக்கியமான உள்ளீடாக விளங்கும் கட்டுமான நடவடிக்கைகளின் விரிவாக்கமே இவ்வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். இதே வேளையில் இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைகளில் காணப்பட்ட மந்தமான செயலாற்றத்தின் காரணமாக சுரங்கமகழ்தல் துணைத்துறை 4.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மந்தமடைந்த உலக சந்தையில் அருங்கற்களுக்கான கேள்வி குறைவடைந்து காணப்பட்டமையினால் இரத்தினக்கல் ஏற்றுமதிகளின் பெறுமதி 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் ஏனைய அகழ்வு நடவடிக்கைகளான பொசுப்பேற்று மற்றும் காரியம் உற்பத்தி மேம்பாடொன்றைக் குறித்துக்காட்டியது.

மின்சாரம், வாயு, மற்றும் நீர் வழங்கல்துறை முன்னைய ஆண்டின் 4.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் 2.9 சதவீதங் கொண்ட சுருக்கத்தினைக் காட்டியது. மின்சாரத் துணைத்துறையின் கூட்டிய பெறுமதியில் 3.7 சதவீத வீழ்ச்சியை விளைவித்த ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் காணப்பட்ட மின்சார நெருக்கடி நிலைமையே இதற்குப் பங்களிப்புச் செய்த முதன்மைக் காரணமாகும். அதிகரித்த எரிபொருள் விலைகளின் காரணமாக உற்பத்திச் செலவில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பினைத் தணிப்பதற்கான தற்காலிக வழிமுறையொன்றாக குளிரூட்டிகள் மற்றும் செவ்வொளி விளக்குகளுக்காக தேசிய மின் முறையிலிருந்தான மின்சார பயன்பாடு கட்டுப்படுத்தப்பட்டதோடு 2001ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கை மின்சபை மின்சார நுகர்வின்மீது 25 சதவீத மிகைக்கட்டணம் ஒன்றை விதித்தது. இரண்டாம் அரைப்பகுதியில் வழங்கலின் மூலம் கேள்வியை ஈடுசெய்ய இயலாது காணப்பட்டமையினால் இலங்கை மின்சபைக்கு மின்வெட்டினை நடைமுறைப்படுத்த வேண்டியேற்பட்டது. ஆண்டின் முதலரைப் பகுதியில் மின் உருவாக்கம் 3 சதவீதத்தினால் அதிகரித்தது எனினும் இரண்டாம் அரைப்பகுதியில் வழங்கலின் மூலம் 7.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஆண்டுக்கான 2.5 சதவீத வீழ்ச்சியை விளைவித்தது. தொடர்ச்சியான வளர்ச்சி நிலைமைகளின் காரணமாக இலங்கை மின்சபையினால் உருவாக்கப்பட்ட நீர் மின்உற்பத்தி இவ்வாண்டில் 3.5 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தவேளையில் இலங்கை மின்சபையினால் உருவாக்கப்பட்ட வெப்பமின்வலு 14.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வெப்பமின்வலுப் பொறியொன்று பழுதடைந்தமையும் இலங்கை மின் சபைக்கான அதிக செலவின் காரணமாக 2001ஆம் ஆண்டின் யூன் இறுதியிலிருந்து அவசரகால வாடகைப் பொறிகளின் பயன்பாடு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையுமே இதற்கான முதன்மைக் காரணங்களாகும். இவ்வாண்டில் தனியார் துறையினருக்கு வெப்ப மற்றும் நீர் மின்வலு உருவாக்கத்தின்படி 28.7 சதவீதத்தினால் (அல்லது 276 சிகாவாட் மணித்தியாலங்கள்) அதிகரிப்பதற்கு இயலுமாக இருந்தபோதிலும் இந்த மூலங்களினால் மேலதிக கேள்வியை ஈடுசெய்ய இயலாது இருந்தது. குழாய் நீரின் சேகரிப்பு, தூய்மைப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பினை உள்ளடக்கிய தண்ணீர் துணைத்துறை முன்னைய ஆண்டின் 5.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. மின் வெட்டின் காரணமாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் நீர் வழங்கல் கட்டுப்படுத்தப்பட்டது.

### விவசாயத்துறை

2001ஆம் ஆண்டில் விவசாயத்துறையின் கூட்டிய பெறுமதி 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவ மழை கிடைக்காமையே இதற்கான காரணமாகும். தேயிலை, இறப்பர், தெங்கு, நெல் ஆகிய முதன்மைப் பயிர்களும் ஏனைய உணவுப்பயிர்களும் இந்த பாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. பயிர்த்துறையின் வீழ்ச்சியின் எதிர்க்கணியத் தாக்கமானது கோழி இறைச்சி, பால், மற்றும் முட்டை ஆகிய முக்கிய வகைகளின் உற்பத்தி அதிகரித்த கால்நடைத்துறையின் சிறந்த செயலாற்றத்தின் காரணமாக ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. காடாக்கல் துறையின் பெறுபேறுகள் சாதகமாகக் காணப்பட்டதோடு பொதுவான விவசாயத்துறையில் வரட்சியின் தாக்கத்தினைத் தணிப்பதற்கும் பங்களிப்புச் செய்தது.

பெருந்தோட்டப் பயிர்களின் கூட்டிய பெறுமதி 6.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1993ஆம் ஆண்டிலிருந்து தேயிலை உற்பத்தியில் காணப்பட்ட உறுதியான மேல் நோக்கிய போக்கு 2001ஆம் ஆண்டில் நேர்மாற்றம் அடைந்தது. 2000ஆம் ஆண்டில் 300 மில்லியன் கிலோக்கிறாம்களை எய்திய வெளியீடு

**அட்டவணை 2.2**
**ஏனைய வேளாண்மைத் துணைத்துறைகளின் உள்ளமைப்பு**

| துறை | பெறுமதி கூட்டப்பட்ட (1996) நிலையான விலையில் (ரூ.மில்.) | | |
|---|---|---|---|
| | 1999(அ) | 2000(அ) | 2001(அ) |
| | 77,236 | 77,913 | 76,355 |
| காயகறிகள் | 35,235 | 36,426 | 35,166 |
| துணை உணவுப் பயிர்களுக்கான உதவுதொகை (ஆ) | 15,781 | 16,032 | 15,312 |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (இ) | 7,666 | 6,960 | 6,299 |
| கரும்பு | 1,281 | 1,345 | 1,039 |
| புகையிலை | 1,484 | 1,325 | 1,460 |
| விலங்கு வளர்ப்பு (ஈ) | 6,597 | 6,630 | 7,371 |
| ஏனையவை | 9,192 | 9,195 | 9,708 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) துணை உணவுப் பயிர்கள். உருளைக்கிழங்கு, மிளகாய், சின்னவெங்காயம். பெரியவெங்காயம், பயறு, தட்டைப்பயறு மற்றும் குரக்கன் என்பனவற்றை உள்ளடக்கும்.
(இ) சிறு ஏற்றுமதிப் பயிர்கள். கோப்பி, மிளகு, கறுவா, கராம்பு, மரமுந்திரிகை மற்றும் வெற்றிலை என்பவற்றை உள்ளடக்கும்.
(ஈ) விலங்கு வளர்ப்பு, பால், முட்டைகள், கோழி வளர்ப்பு மற்றும் ஏனைய இறைச்சி வகையை உள்ளடக்கும்.

இவ்வாண்டில் 3.4 சதவீதத்தினால் 295 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. சிறு உடமையாளர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட தாழ்நிலத் தேயிலையின் வெளியீடு சிறிதளவால் அதிகரித்து மொத்த வெளியீட்டில் 56 சதவீதத்திற்கு வகைகூறியது. இதற்கு மாறாக உயர்நில மற்றும் மத்திய நிலத்தேயிலைகள் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்தன. ஆண்டின் முதல் அரைப்பகுதியில் ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்த தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தமானது தாழ்ந்த உற்பத்தி அளவுகளுக்குப் பங்களிப்புச் செய்த இன்னுமொரு காரணமாகும். வரட்சியானது மீள்நடுகையினையும் புதிய பயிரிடலையும் மோசமாகப் பாதித்தது. இந்த நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் உலக சந்தையின் மிகை வழங்கல் ஒன்றின் காரணமாக ஐ.அ. டொலர் நியதிகளில் சருவதேச சந்தைகளில் தேயிலை விலைகள் 3.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

2001ஆம் ஆண்டில் 2,796 மில்லியன் காய்கள் என மதிப்பிடப்பட்ட தெங்கு உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உச்ச உற்பத்தியைவிட 9.7 சதவீதம் குறைவானதாகும். உற்பத்தியின் வீழ்ச்சிக்கு 2000ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2001ஆம் ஆண்டிலும் பெறப்பட்ட குறைந்த மழை வீழ்ச்சியின் காலம் கடந்த தாக்கமே காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது. 2000ஆம் ஆண்டிலும் 2001ஆம் ஆண்டிலும் வளமாக்கிப் பிரயோகத்தின் குறைப்பும் 2001ஆம் ஆண்டின் வெளியீட்டில் எதிர்க்கணிய தாக்கமொன்றினைக் கொண்டிருந்தது. வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக ஆண்டின் பிற்பகுதியில் தேங்காயின் விலைகள் கடுமையாக அதிகரித்தன.

2001ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 2.69 மில்லியன் மெற்றிக் தொன்களாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டைவிட 5.7 சதவீத வீழ்ச்சியாகும். பெரும்போகத்தில் உற்பத்தி 9.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை இதற்கான தனியான காரணமாகும். நீர்ப்பாசன பிரதேசங்களில் அதிகரித்த விளைச்சலின் முதன்மைக் காரணத்தினால் வரட்சியின் மத்தியிலும், சிறு போகத்தில் சிறிதளவு அதிகரித்த உற்பத்தி பெறப்பட்டது. இதன் காரணமாகவும் மழை நீரினால் பயிர்செய்யப்பட்ட இலாபமற்ற காரணிகளில் பயிர்ச்செய்கை கைவிடப்பட்டமையினாலும் 2001ஆம் ஆண்டின் இரு போகங்களிலும் சராசரி விளைச்சல் அதிகரித்தது. இதே வேளையில் அரிசி இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடன் இணைந்து நெல் உற்பத்தியின் வீழ்ச்சியானது நெல் விவசாயிகளுக்கு அதிஉயர் உற்பத்தியாளர் விலைகளைப் பெற்றுக் கொடுத்தது.

மரக்கறி வகைகள், பழவர்க்கங்கள், துணை உணவுப் பொருட்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், மற்றும் கால்நடை வளர்ப்பினை உள்ளடக்கிய ஏனைய விவசாயத்துறை இவ்வாண்டில் 2.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மரக்கறி உற்பத்தி 3.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெரும்பாலும் அனைத்துத் தாழ் நில மரக்கறி வகைகளும் கீழ் நோக்கிய உற்பத்திப் போக்கினைக் காட்டிய வேளையில் பெரும்பாலான உயர்நில மரக்கறி வகைகளினதும் கிழங்கு வகைகளினதும் உற்பத்தி மட்டங்கள் அதிகரித்தன. ஆண்டு முழுவதிலும் நிலவிய வரட்சியானது தாழ்நில மரக்கறி வகைகளின் உற்பத்தியினை மோசமாகப் பாதித்தது. துணை உணவுப் பொருட்கள் 4.5 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. வடகிழக்குப் பருவக்காற்றும் தென்மேற்குப் பருவக் காற்றும் பொய்த்துப்போனமையின் இன்னுமொரு விளைவு இதுவாகும். உருளைக்கிழங்கு தவிர்ந்த ஏனைய அனைத்து வகை துணை உணவுப் பயிர்களினதும் உற்பத்தி அளவு வீழ்ச்சியடைந்தது. உருளைக்கிழங்கு உற்பத்தி 19 சதவீத உயர் அதிகரிப்பைக் காட்டியது. இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் மீது விதிக்கப்பட்ட குறைத்துரைக்கப்பட்ட தீர்வையின் ஊடாக உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட அதிகூடிய பாதுகாப்பே இதற்கான காரணமாகும்.

கால்நடை வளர்ப்பில் குறிப்பிடத்தக்க 11 சதவீத உற்பத்தி அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இவ்வாண்டில் கோழி இறைச்சி உற்பத்தி 12 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தபோதிலும் சுற்றுலாக் கைத்தொழில் ஒடுக்கப்பட்டமையின் காரணமாக கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் இக்கைத்தொழில்

பின்னடைவைக் கொண்டிருந்தது இதன் விளைவாக பாரிய அளவிலான கோழி இறைச்சி குளிர் களஞ்சியங்களில் ஒன்று சேர்ந்ததோடு கோழி உற்பத்திப் பொருட்களின் பண்ணைமட்ட விலை உற்பத்திச் செலவுக்கும் கீழாக வீழ்ச்சியடைந்தது. ஆண்டின் பிற்பகுதியில் காணப்பட்ட மின்வெட்டானது இப்பிரச்சனையை மேலும் மோசமாக்கியது. எனினும் உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்து அதிகரித்த இறைச்சி உற்பத்தியானது ஏற்றுமதிச் சந்தையினை நாடும்படி இக் கைத்தொழிலைத் தூண்டியது. 2000ஆம் ஆண்டின் 50 மெற்றிக் தொன்களுக்கு எதிராக 2001ஆம் ஆண்டில் கோழி மற்றும் பதனிடப்பட்ட உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி 209 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தமையில் இது தெளிவாகியது. இவற்றில் பெரும்பாலானவை நாலாம் காலாண்டில் மாலைதீவுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இதே வேளையில் பல ஆண்டுகளாக பின்னடைவினைக் கொண்டிருந்த காடாக்கல் துணைத்துறை 2001 ஆம் ஆண்டில் 5 சதவீத மேம்பட்ட வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்தது. எதிர்கால பாவனைக்காக தனியார் துறையினால் புதிய நீண்டகால முதலீடுகள் காடாக்கல் துணைத்துறையின் கூட்டிய பெறுமதியை அதிகரிக்கச் செய்தன. இந்தப் போக்கானது எதிர்காலத்திலும்கூட காடாக்கலின் உள்ளார்ந்த பெறுமதி கூட்டலை அதிகரிப்பதற்கு நன்மைபயக்கும்.

### பணிகள்துறை

இவ்வாண்டில் பணிகள்துறை 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி 2001ஆம் ஆண்டின் பொதுவான பொருளாதார வளர்ச்சியின் மீது மிகக்கடுமையான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. வர்த்தகத் துறையில் கூட்டப்பட்ட பெறுமதி ரூ.12,280 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. இது மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட ரூ.12,423 மில்லியன் பெறுமதி கொண்ட பொதுவான சுருக்கத்தினைக் பெரும்பாலும் ஒத்ததாகும். இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு 2001இல் பெறுமதி கூட்டப்பட்ட இறக்குமதி வர்த்தகம் 10.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்காக 2001ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கமும் இவ்வாண்டுக் காலத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட பொதுவான பின்னடைவும் ஓரளவிற்கு காரணமாயின. ஏற்றுமதிப் பொருட்களுக்கான குறைந்த கேள்வியின் காரணமாக ஏற்றுமதி வர்த்தகத் துணைத்துறையும் 8 சதவீத பின்னடைவினைக் கொண்டிருந்தது. 2001இல் இறக்குமதி ஏற்றுமதிகளின் பெறுமதி ஐ.அ.டொலர் நியதிகளில் முறையே 18.4 சதவீதத்தினாலும், 12.8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து இத்துணைத் துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. உள்நாட்டு வர்த்தகத்துணைத்துறை 1.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது வேளாண்மை உற்பத்திகளிலும் உள்நாட்டுச் சந்தைகளுக்குப் பொருட்களை வழங்கும் தயாரிப்புப் பொருட்களிலும் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியை எடுத்துக்காட்டின.

பொதுவான பொருளாதார பின்னடைவு காணப்பட்டபோதும் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல்துறை 2001இல் 5.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்யக்கூடியதாக இருந்தது. 1996இலிருந்து பலமாகவும் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியடைந்துவந்த தொலைத் தொடர்பூட்டல் துணைத்துறை முன்னைய ஆண்டைவிட 25.5 சதவீதத்தினால் விரிவடைந்தமையின் மூலம் முழுத்துறையின் வளர்ச்சிக்கும் மேலும் தூண்டுதலை வழங்கியது. வளர்ச்சி வீதம் 25.1 சதவீதமாக இருந்தது. இவ்வளர்ச்சிச் செயலாற்றத்திற்கு செலூலர் தொலைபேசிகள் இவ்வாண்டுக் காலத்தில் 55 சதவீதத்தினால் விரிவடைந்தமையே பெருமளவு காரணமாகும். பாரிய முதலீடுகள் தீவிரமான விளம்பர முயற்சிகள், புதிய வசதிகளை அறிமுகப்படுத்தியமை, போட்டி விலைகள் என்பன செலூலர் தொலைபேசிக் கைத்தொழிலின் இவ்வளர்ச்சிக்குப் பங்களித்தன. அதேவேளை, 2001ஆம் ஆண்டில் இணையம் மற்றும் மின் அஞ்சல் பயன்படுத்துநர்களின் எண்ணிக்கையும் 52 சதவிதம் கொண்ட ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும் பொருத்தப்பட்ட தொலைபேசி இணைப்புக்காக முன்னர் நிலுவையிலிருந்த கேள்வி ஈடுசெய்யப்பட்டமையின் காரணமாக பொருத்தப்பட்ட தொலைபேசிகளின் புதிய இணைப்புக்களின் அதிகரிப்பு 8 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

திருப்திகரமற்ற பொருளாதார சூழலொன்றில் குறிப்பாக வெளிநாட்டு வர்த்தகத்துறையில், துறைமுகப்பணிகள் துணைத்துறை பூஜ்ய வளர்ச்சி நிலைமையைப் பேணியது. ஆண்டின் முதலரைப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளில் வீழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டபோதும் இம்முன்னேற்றம் காணப்பட்டமைக்கு சரக்குக் கையாளல், மாற்றிக் கப்பலேற்றல் நடவடிக்கைகளில் காணப்பட்ட அதிகரித்த வினைத்திறனே ஓரளவிற்குக் காரணமாக இருந்தது. எனினும் கடல் வழிப்பயணத்தின்மீது விதிக்கப்பட்ட யுத்தஇடர்நேர் காப்புறுதிக் கட்டணங்களும் அதனைத் தொடர்ந்து ஆண்டின் பின்னரைப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தகத்தில் காணப்பட்ட சுருக்கமும் முதலரையாண்டின் சாதகமான செயலாற்றத்தினை

அழித்துவிட்டன. ஒகத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபையில் காணப்பட்ட தொழிலாளர் அமைதியின்மை ஒரு வார காலத்திற்கு துறைமுக நடவடிக்கையைப் பெரும்பாலும் முடக்கிவிட்டமையும் மோசமான முறையில் பங்களித்தது.

பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துத் துணைத்துறை வீதிகள், புகைவண்டி மற்றும் வான்வழி ஆகிய மூன்று வேறுபட்ட பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. முன்னைய ஆண்டின் 4.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2001இல் இத்துறைகளின் இணைந்த சுருக்கவீதம் 0.5 சதவீதமாக இருந்தது. எதிர்க்கணிய வளர்ச்சிக்கு, உள்நாட்டு உற்பத்தியிலும் அதேபோன்று வெளிநாட்டு வர்த்தகத்திலும் ஏற்பட்ட சுருக்கத்துடன் பிணைந்திருந்த வீதிவழிப் போக்குவரத்தின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாக இருந்தது. எனினும், பயணிகள் போக்குவரத்து நன்கு செயலாற்றி சரக்கு போக்குவரத்துத் துணைத்துறையின் எதிர்க்கணிய தாக்கத்தினை ஓரளவிற்கு தணித்தது. அரச போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களும் இவ்வபிவிருத்திக்கு உதவின. பிராந்திய பேருந்துக் (கொத்தனி) கம்பனிகளினால் நாளொன்றிற்கு தொழிற்படுத்தப்படும் பேருந்துக்களின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டின் 5,496 இலிருந்து 2001இல் 5,722 இற்கு அதிகரித்தது. தொழிற்படுத்தப்பட்ட புகைவண்டிகளினதும் பயணம் செய்த பயணிகளினதும் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, கையாளப்பட்ட சரக்குகளின் அளவு என்பனவற்றினால் காட்டப்பட்டவாறு இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் பெறுமதி கூட்டலும் 2001இல் உயர்வடைந்தது. 2000ஆம் ஆண்டில் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் வலுப்பொறி தொகுதிக்கு புதிதாக 15 வலுப்பொறிகள் சேர்க்கப்பட்டமையும் புகைவண்டிப் பணிகள் சிறப்பதற்கு தூண்டுதலாக விளங்கின. அதேவேளை ஆண்டின் மூன்றாம் காலாண்டில் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தின்மீதும் ஐக்கிய அமெரிக்காவிலும் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து வான் போக்குவரத்து துணைத்துறையிலும் இடர்ப்பாடுகள் காணப்பட்டன. சிறிலங்கன் எயர்லைன்சில் பறந்த பயணிகள் கிலோ மீற்றர் 2000ஆம் ஆண்டின் 6,860 மில்லியனிலிருந்து 2001இல் 6,556 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

மந்தமான பொருளாதார நிலைமைகள் காணப்பட்டபோதும், 2001இல் வங்கித்தொழில் மற்றும் காப்புறுதித்துறை 5 சதவீத ஆரோக்கியமான வளர்ச்சியைக் காட்டியது. காப்புறுதித்துறை சிறந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்தமைக்கு நிச்சயமற்ற பொருளாதார நிலைமைகளும் இவ்வாண்டில் பேணப்பட்ட திடமான வளர்ச்சியுமே காரணமாகும். வர்த்தக வங்கித்தொழில் துறையும் ஒப்பீட்டு ரீதியில் சிறந்த முறையில் செயலாற்றியதுடன் உண்மை நியதிகளில் 3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இதற்கு, வர்த்தக வங்கித்தொழில் துறையில் தேறிய வட்டி வருமானம் அதிகரித்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். அத்துடன் முன்னைய ஆண்டின் பின்னரைப்பகுதியில் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீதான நியதிஒதுக்குத் தேவைப்பாடுகள் குறைக்கப்பட்டமையும் வர்த்தக வங்கித்தொழில் துணைத்துறையின் நிதிச் செலவுகளின் தாக்கத்தினைக் குறைத்தன.

வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத மற்றைய அனைத்து பணிகளையும் உள்ளடக்கிய பணிகள் துறை 2001இல் 2.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. தனியார்நலத்துறைப் பணிகள், தனியார் கல்விப் பணிகள், விளம்பரப் பணிகள் மற்றும் வீட்டுப்பாவனைப் பொருட்களிலிருந்து ஊர்திகள் வரையான அனைத்து வகை பழுதுபார்த்தல் பணிகளும் இவ் வளர்ச்சிக்குப் பங்களித்தன. எனினும், வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகைகளில் முக்கியமாகத் தங்கியிருந்த சுற்றுலா விடுதித் துணைத்துறை 2001இல் சுருக்கமடைந்தமைக்கு ஆண்டின் பின்னரைப்பகுதியில் சுற்றுலா வருகைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட 10.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பின்னரைப்பகுதியில் 44 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. சுற்றுலா விடுதித் கைத்தொழில், வானூர்தி நிலையத்திலும் அதேபோன்று ஐக்கிய அமெரிக்காவிலும் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலின் விளைவாக ஏறத்தாழ முடமாக்கப்பட்டது. ஆண்டின் பின்னரைப்பகுதியில் திரிசங்கு நிலையிலிருந்த கைத்தொழில் பெருமளவிற்கு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளில் தங்கியிருந்தது.

## 2.3 செலவினம்

உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட கூட்டுக்கேள்வி மொத்த உள்நாட்டுச் செலவினால் அளவிடப்படுகின்றது. இது பொருளாதாரத்தின் தனியார் மற்றும் அரசதுறைகளின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவின் தொகையாகும். 2001இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு ரூ.1494 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 2000ஆம் ஆண்டினை விட 7.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. மொத்த செலவினத்தில், நுகர்வுச் செலவு 79 சதவீதத்திற்கு வகைகூறியது. மொத்த உள்நாட்டுச் செலவினம் மற்றும் பொருள்கள், பணிகளின் தேறிய இறக்குமதிகள்

என்பனவற்றின் தொகையான சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.1400 பில்லியனாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டைவிட 11.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.

நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வுச் செலவினம் ரூ.1185 பில்லியனாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினை விட 14.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வதிகரிப்பிற்கு இவ்வாண்டில் நிலவிய பணவீக்க அழுத்தமே முக்கிய காரணமாகும். நுகர்வுச் செலவின் உண்மை அதிகரிப்பு 0.4 சதவீதமாக இருந்தவிடத்து முன்னைய ஆண்டின் தொடர்பான அதிகரிப்பு 5 சதவீதமாகக் காணப்பட்டது. நுகர்வுச் செலவில் பெரும்பாலும் 88 சதவீதத்தினைக் கொண்டுள்ள தனியார் நுகர்வுச் செலவினம் பெயரளவு நியதிகளில் 2000ஆம் ஆண்டின் ரூ.906 பில்லியனிலிருந்து 2001இல் ரூ.1,044 பில்லியனுக்கு 15.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காட்டியது. தனியார் நுகர்வுச் செலவில், இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் காரணியல்லா பணிகள் மீதான செலவினம் பெயரளவு நியதிகளில் 6.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாண்டு காலத்தில் முக்கிய அடிப்படை உணவு விடயங்களில் இறக்குமதி அளவு நியதிகளில் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உணவல்லா வகை இறக்குமதிகளில் ஐ.அ.டொலர் நியதிகளில் 46 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி உந்து ஊர்திகள் மற்றும் ஈருருளிகளின் இறக்குமதியில் பதிவு செய்யப்பட்டன. இவ்வீழ்ச்சிக்கு குறிப்பிட்ட அரசதுறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட இறக்குமதித் தீர்வைச் சலுகைகள் இடைநிறுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும். உள்நாட்டு உற்பத்தியில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் வகையில் அரிசி, தெங்கு உற்பத்திகள் மற்றும் மீன் என்பன மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே ஒரே காரணமாகும். கைத்தொழில் பொருள்கள் மீதான செலவினம் பெயரளவு நியதிகளில் முன்னைய ஆண்டினை விட 13.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு பதனிடப்பட்ட உணவு மற்றும் ஆடை வகைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களே காரணமாகும்.

நடைமுறைச் சந்தை விலைகளில் 2001இல் முதலீட்டுச் செலவினம் ரூ.308 பில்லியாக அமைந்து முன்னைய ஆண்டினை விட 12.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. இவ்வீழ்ச்சிக்கு தனியார் முதலீடுகள் 14.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே ஒரே காரணமாகும். தனியார் துறையில், பாரிய அளவு முதலீட்டுச் செயற்றிட்டங்களின் மீது தொடங்கப்பட்ட வேலைகள் தொடர்ந்தன. எனினும் இவ்வாண்டில் வேலை தொடங்கப்பட்ட கட்டுநாயக்கா நெடுஞ்சாலை தவிர, வேறு புதிய பாரிய அளவு செயற்றிட்டங்கள் எதுவும் காணப்படவில்லை. துறைவாரியான அடிப்படையில் போக்குவரத்துத் துறையில் தனியார்துறை முதலீடுகள் நடைமுறை நியதிகளில் 71.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதனைத் தொடர்ந்து பயிர்ச்செய்கை, மீள்நடுகை மற்றும் காணி அபிவிருத்தி மீதான முதலீடுகளும் (20 சதவீதம்) பொறி மற்றும் பொறித்தொகுதி மீதான முதலீடுகளும் (8.7 சதவீதம்) அதனைத் தொடர்ந்து மற்றைய மூலதனப் பொருள்கள் மீதான முதலீடும் (5.0 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன. அதேவேளை கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டுமானப் பொருள்கள் மீதான முதலீடுகள் 14.3 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்த தனியார் முதலீடுகள், குறிப்பிடத்தக்க பங்கொன்று துறைமுகப்பணிகள், தொலைத்தொடர்பூட்டல் மற்றும் வலு ஆகியவற்றின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டது. எனினும் அரச முதலீட்டுச் செலவினம் 2.1 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. அரச முதலீடு முக்கியமாக வீத நிருமாணம், வலு மற்றும் நீர் வழங்கல்களிலேயே குவிந்து காணப்பட்டது.

## 2.4 மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருள்கள் மற்றும் காரணியல்லா பணிகளின் இறக்குமதிகள் (வெளிநாட்டு மூலவளங்கள்) என்பனவற்றை உள்ளடக்கிய பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த மொத்த மூலவளங்கள் நடைமுறைச் சந்தை விலைகளில் 2000ஆம் ஆண்டின் ரூ.1882 பில்லியனிலிருந்து 2001இல் ரூ.2,011 பில்லியனுக்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட ரூ.143 பில்லியன் (11.3 சதவீதம்) அதிகரிப்பினாலும் வெளிநாட்டு மூலவளங்களில் ஏற்பட்ட ரூ.13 பில்லியன் (2.9 சதவீதம்) கொண்ட வீழ்ச்சியினாலும் (2.0 சதவீதம்) உருவாக்கப்பட்டதாகும்.

நிலையான விலைகளில் (1996) மதிப்பிடப்பட்ட மூலவளங்களின் கிடைப்பனவு 2001ஆம் ஆண்டில் 4.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பொருளாதார வளர்ச்சி 1.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமையும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் 10.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையும் இவ்வீழ்ச்சிக்கு பொறுப்பாக இருந்தன. 2000ஆம் ஆண்டில் நிலையான நியதிகளில் மூலவளங்களின் கிடைப்பனவு 9.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இம் மூலவளங்களின் பயன்பாட்டினைப் பொறுத்தவரையில் நுகர்வு உண்மை நியதிகளில் 0.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தவேளையில் முதலீடு மற்றும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகள் முறையே 17.1 சதவீதத்தினாலும், 6.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. பயன்பாட்டில் நுகர்வின் பங்கு 57

**அட்டவணை 2.3**
**நிலையான (1996) விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**

| விடயம் | சதவீதப் பங்கு | | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|---|
| | 1999 | 2000(அ) | 2001(அ) | 2000 | 2001 |
| 1. மொத்த மூலவளங்கள் | 100 | 100 | 100 | 9.0 | -4.8 |
| சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி | 67 | 65 | 67 | 6.0 | -1.4 |
| பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் (ஆ) | 33 | 35 | 33 | 14.9 | -10.9 |
| 2. பயன்பாடு | 100 | 100 | 100 | 9.0 | -4.8 |
| நுகர்வு | 59 | 57 | 60 | 5.0 | 0.2 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 18 | 18 | 15 | 10.0 | -17.4 |
| அரசு | 2 | 2 | 2 | 6.4 | -7.9 |
| அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை | 16 | 16 | 13 | 10.5 | -18.6 |
| இருப்புக்களின் மாற்றம் | 0 | 0 | 0 | -58.2 | -12.1 |
| பொருட்களினதும்காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் (ஆ) | 24 | 26 | 25 | 18.0 | -7.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) வானூர்திகளின் கொள்வனவுக்காக பெறப்பட்ட ஐ.அ.டொலர் 298.8 மில்லியன் மீள் கொள்வனவு, வானூர்திகளின் சேதங்களுக்கு எதிராக பெறப்பட்ட காப்புறுதிக் கொடுப்பனவுகள் என்பன 2001ஆம் ஆண்டுக்கான காரணியல்லா பணிக்கான சமப்படுத்தும் விடயமாகக் கருதப்படாமையினால் சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சதவீதத்திலிருந்து 60 சதவீதத்திற்கு வளர்ச்சியடைய முதலீடுகளின் பங்கு 18 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் பொருள்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் பங்கு சிறிதளவு மாற்றமடைந்தது.

## 2.5 உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள்

1993ஆம் ஆண்டிற்கான தேசிய கணக்குகளின் ஐக்கிய நாடுகள் முறையின் படி சேமிப்புக்கள் என்பது இறுதி நுகர்வில் பயன்படுத்தப்படாத, செலவிடத்தக்க வருமானத்தின் எச்சமொன்றாகத் தோன்றும் மீதியிலுள்ள விடயமாகும். எனினும், இலங்கையிலுள்ள தேசிய கணக்குகளில் ஏற்கனவேயுள்ள முறை பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரந்தளவில் பின்பற்றப்படுகின்ற முறையிலான முதலீட்டு அணுகுமுறையினூடாக சேமிப்புக்களை மதிப்பிடுவதாகும். இதன்படி, உள்நாட்டுச் சேமிப்புக்கள் எச்சமொன்றாக அதாவது முதலீட்டிற்கும் வெளிநாட்டு மூலவளங்களுக்குமிடையிலான வேறுபாடாக (பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் தேறிய இறக்குமதிகள் என வரைவிலக்கணம் செய்யப்பட்டது) மதிப்பிடப்பட்டுள்ளது. தனியார் சேமிப்புக்களையும் அரச சேமிப்புக்களையும் உள்ளடக்கிய உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2001இல் ரூ.215 பில்லியன்களாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டிலும் பார்க்க 2.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. 2001இல் உள்நாட்டுச் சேமிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு அரச வரவுசெலவுத்திட்டத்தின் நடைமுறைக்கணக்கு மீதி என வரைவிலக்கணம் செய்யப்பட்ட அரச சேமிப்புக்கள் 60 சதவீதத்தினால் குறைவடைந்தமையே ஒரே காரணமாகும். அரச அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி அதிகரித்த நடைமுறைச்செலவினம் என்பனவற்றின் காரணமாக இவ்வாண்டில் அரசின் குறைச்சேமிப்பு மோசமடைந்தது. பொருளாதார நடவடிக்கைகள் சுருக்கமடைந்தமை, இறக்குமதி துறைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஆண்டின் பின்னரைப்பகுதியில் வழங்கப்பட்ட வரி ஊக்குவிப்புக்கள், குறிப்பிட்ட அரசதுறைத்தொழில் முயற்சிகளின் மோசமான நிதியியல் செயலாற்றம் அரசின் அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பொறுப்பாக இருந்தவேளையில், அதிகரித்த நலன்புரிச் செலவினமும், வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட விரிவாக்கமும் நடைமுறைச் செலவினம் அதிகரிப்பதற்கு பெருமளவிற்குப் பொறுப்பாக இருந்தன. குடியிருப்பாளரின் சேமிப்புக்களையும் கம்பனிச் சேமிப்புக்களையும் உள்ளடக்கிய தனியார் சேமிப்புக்கள் 2001இல் ரூ.284 பில்லியனுக்கு 8.2 சதவீதத்தினால் அதிகரித்தன. 2000ஆம் ஆண்டில் இது தொடர்பான அதிகரிப்பு 15.5 சதவீதமாகக் காணப்பட்டது. இக்குறைவிற்கு இவ்வாண்டில் உண்மை வருமானத்தில் ஏற்பட்ட சுருக்கம் பொதுவான விலை மட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, கம்பனி இலாபங்களில் ஏற்பட்ட

**அட்டவணை 2.4**
**நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புக்கள்**

ரூ.மில்லியன

| வகை | 1998 | 1999 | 2000(அ) | 2001(அ) |
|---|---|---|---|---|
| 1.சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி | 1,017.986 | 1,105,963 | 1,257,634 | 1,400,180 |
| 2.உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 194,735 | 215,733 | 219,259 | 214,699 |
| 3.வெளிநாட்டில் இருந்தான தேறிய காரணி வருமானம் | -11,556 | -17,831 | -23,083 | -25,048 |
| 4.வெளிநாட்டில் இருந்தான தேறிய தனியார் மாறறல்கள் | 54,785 | 62,438 | 73,810 | 83,802 |
| 5.தேறிய சேமிப்புக்கள | 237,965 | 260,340 | 269,986 | 273,453 |
| 6.உள்நாட்டு சேமிப்பு விகிதம (1இன் சதவீதமாக 2) | 19.1 | 19.5 | 17.4 | 15.3 |
| 7.தேசிய சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 5) | 23.4 | 23.5 | 21.5 | 19.5 |

(அ) தறகாலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வீழ்ச்சி என்பன காரணங்களாக இருந்தன. 2000ஆம் ஆண்டில் 17.4 சதவீதமாக இருந்த உள்நாட்டுச் சேமிப்பு விகிதம் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள்) 2001இல் 15.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் தனியார் சேமிப்பு விகிதமும் 20.9 சதவீதத்திலிருந்து 20.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

உள்நாட்டுச் சேமிப்புக்கள், தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் என்பனவற்றின் மொத்தத் தொகையாகிய தேசிய சேமிப்புக்கள் 2001இல் ரூ.273 பில்லியனாக மதிப்பிடப்பட்டன. தேசியசேமிப்பு விகிதம் உள்நாட்டு சேமிப்பு விகிதத்துடன் ஒப்பிடுகையில் 21.5 சதவீதத்திலிருந்து 19.5 சதவீதத்திற்கு குறைந்தளவில் வீழ்ச்சியடைந்தன. இதற்கு தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் 13.5 சதவீதத்தினால் அதிகரித்தமையே ஒரே காரணமாகும். 2001இல் மத்திய கிழக்கிலிருந்தான தொழிலாளர் பணவனுப்பல்களை முக்கியமாக உள்ளடக்கிய தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் தேசிய சேமிப்புக்களில் ஏறத்தாழ 31 சதவீதத்திற்கு வகைகூறின. 2000ஆம் ஆண்டில் இது தொடர்பான விகிதம் 27 சதவீதமாக இருந்தது.